| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>திருமதி. மலர்செல்வி<br>க.பெ. திரு. வீரமணி | அ.வ.எண். 282/2012 | 11.11.2025 |

2,3,5 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

14) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 உயில் ஆவணத்தில் திருச்சி ஜில்லா இலால்குடி தாலுக்கா, திருப்பங்கலி மஜரா, வாழ்மாள்பாளையம் கிராமத்தில் இருக்கும் என்ற முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 இறப்பு சான்றிதழில் வாழ்மாள்பாளையம், கீழுர், திருப்பைஞ்ஞீலி (தெற்கு) என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 இறப்பு சான்றிதழில் 1/248 வடக்கு தெரு, திருப்பைஞ்ஞீலி (வடக்கு) என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

15) மேற்படி வா.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ள முகவரில் தான் எனது பிராது மற்றும் எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலம் ஆகியவற்றில் முகவரியாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 செல்லம்மாள் இறந்த தேதி 20.08.1988 என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இறப்பு சான்றிதழை நான் பெற்ற தேதி 30.08.2008 என்றால் சரிதான்.

16) நான் தவறான தகவல்களை கொடுத்தும், இறப்பு தேதியை கொடுத்தும் வா.சா.ஆ.6 இறப்பு சான்றிதழை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணம் சுமார் 20 ஆண்டுகளுக்கு பிறகு பெறப்பட்டுள்ளதால் மேற்படி ஆவணத்தில் கண்ட தகவல்கள் சரியானதல்ல என்றால் சரியல்ல, திருச்சி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து இறப்பு சான்றிதழை பெற்றுள்ளேன், எனது கணவரின்

பெரியம்மாவான செல்லம்மாளுக்கு எனது கணவர் இறப்பு சான்றிதழ் பெற்றிருப்பார் என்று நினைத்தேன், ஆனால் அவர் பெறவில்லை.

17) நான் திருச்சி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து உத்தரவு பெற்று இறப்பு சான்றிதழை பெற்றேன் என்பற்கு ஆதரவாக மேற்படி வழக்கில் பெற்ற உத்தரவை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. செல்லம்மாள் (எ) அழகுநாச்சியாருக்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். வெங்கட்ராமனுக்கு பழனியாயி, பழனியம்மாள் என்ற இரு மனைவிகள் என்றால் சரிதான்.

18) வெங்கட்ராமன்–பழனியாயி (முதல்மனைவி) தம்பதிகளுக்கு 4 மகள்கள் என்றால் சரிதான். ரெங்கம்மாள், பெருமா, அலமேலு, செல்லம்மாள் (எ) அழகுநாச்சியம்மாள் ஆகியோர்கள் என்றால் சரிதான். மேற்படி பெருமாவின் மகன் தான் எனது கணவர் என்றால் சரிதான். வெங்கட்ராமனின் 2வது மனைவி பழனியம்மாளுக்கு வெங்கடாசலம் என்ற மகனும், பாக்கியம் என்ற மகளும் உள்ளனர் என்றால் சரிதான்.

19) வா.சா.ஆ.4 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில், "நாளது தேதி முதல் நீயே உன் ஆயுள் வரை ஆண்டு அனுபவித்து கொண்டு உன் ஆயுளுக்கு பிறகு மேற்கண்ட சொத்துக்கள் என்னுடைய வாரிசுகள் சர்வ சுதந்திரமாய் அடைந்துகொள்ள வேண்டியது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

20) வா.சா.ஆ.4 ஆவணத்தை வெங்கட்ராமன் செல்லம்மாள் (எ) அழகுநாச்சியம்மாளுக்கு எழுதும் போது, செல்லம்மாள் (எ) அழகுநாச்சியம்மாளுக்கு பிள்ளைகள் இல்லாததால், செல்லம்மாள் (எ) அழகுநாச்சியம்மாளுக்கு ஆயுளுக்கு பிறகு வெங்கட்ராமனின்

வாரிசுகளுக்கு தனது சொத்துக்கள் சென்றடையவேண்டும் என்பதற்காகவே எழுதிவைத்துள்ளார் என்றால் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது.

21) வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணத்தை வெங்கட்ராமன் மேற்படி வாசகங்களை குறிப்பிட்டு ஏற்படுத்தி கொடுத்தது சரியானதா என்றால் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வா.சா.ஆ.5 உயில் ஆவணம் ஏற்படுத்தப்பட்டது வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையிலா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

22) வா.சா.ஆ.5 உயில் ஆவணத்தில் கண்ட வாசகங்கள் எனது கணவரால் தயார் செய்யப்பட்டு, எழுதப்பட்ட வாசகங்கள் என்றால் சரிதான். எனது கணவரால் தயார் செய்யப்பட்ட வா.சா.ஆ.5 உயில் ஆவணத்தை வைத்து நாளது தேதி வரை எவ்வித வருவாய் ஆவணமும் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் வெங்கட்ராமனும், அவரது வாரிசுகளும் இருந்த போது வீடு இருந்ததற்கு ஆதரவாக வீட்டுவரி ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

23) தாவா சொத்தின் மேற்குபுறத்தில் 4ம் பிரதிவாதியை தவிர இதர பிரதிவாதிகளுக்கும், மற்றும் வெங்கட்ராமன் மற்றும் அவரது கூட்டுபாத்தியஸ்தர்களுக்கும் சொந்தமான குலதெய்வ கோவில் உள்ளது என்றால் மேற்கு புறம் ஒருகோவில் உள்ளது, மேற்படி நபர்களுக்கு சொந்தமானதா என்று எனக்கு தெரியாது, அது எங்களது இடத்தில் இல்லை.

24) நான் வாழ்மாள்பாளையத்தில் திருமணமானதிலிருந்து குடியிருந்து வரும் நிலையில், மேற்படி கோவில் யாருக்கு சொந்தமானது என்று எனக்கு தெரியாது என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீ.ம.சா.ஆ.3 ஆணையர் அறிக்கையில் 11 பத்தியில் மேற்படி சொத்திற்கு மேற்குபுற நடுவில் பெருமாள் கோவில்வீடு ஒன்றும் காணப்பட்டது என்று ஆணையர் கூறியுள்ளார் என்றால் பெருமாள் கோவில் மட்டமே உள்ளது, வீடு கிடையாது.

25) மேற்படி பெருமாள்கோவிலுக்கு செல்லும் வழி முழுவதும் கருவேல் முள்கள் நிறைந்து உள்ளே செல்ல முடியாதவாறு தற்போதும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பெருமாள் கோவில் பராமரிக்கப்படாமலும், வழிபாடு இல்லாமலும் நாளது தேதி வரை உள்ளது என்றால் சரிதான்.

26) தாவா சொத்தின் 8 பாத்தியஸ்தர்களில் 4ம் பிரதிவாதியை தவிர இதர பிரதிவாதிகள் மேற்படி கோவிலுக்கு செல்லும் பாதையை சரி செய்ய கோரி வருவாய் துறையில் அனுமதி பெற்று JCB இயந்திரம் மூலம் பாதையை சரிசெய்தனர் என்றால் சரியல்ல, அவர்கள் பாதையை சரிசெய்யவில்லை, எனது இடத்தை JCB இயந்திரம் மூலம் தோண்டினார்கள். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.10 புகைபடத்தில் கண்ட சொத்தை தாவா சொத்து என்றால் சரிதான்.

27) வா.சா.ஆ.10 புகைப்படத்தில் எதாவது சேதாரம் காணப்படுகிறதா என்றால் காணப்படுகிறது. நான் சொல்வது போல் வா.சா.ஆ.10 புகைப்படத்தில் எவ்வித சேதாரம் காணப்படவில்லை என்றாலும், ஆனால் காணப்படுவதாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும்

சரியல்ல. வா.சா.ஆ.10 புகைப்பட வரிசையில் 2 வது புகைப்படத்தில் காணப்படும் JCB இயந்திரத்திற்கும், வழக்கு சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

28) நான் இவ்வழக்கை தாக்கல் செய்த பிறகு பொது மக்களும், பிரதிவாதிகள் உட்பட இதர பாத்தியஸ்தர்களும் மேற்படி பெருமாள் கோவிலை வழிபாடு செய்ய நான் தடை செய்கிறேன் என்றால் சரியல்ல, நான் எவ்வித தடையும் செய்யவில்லை. அப்படியானால் மேற்படி கோவிலுக்கு செல்லும் பாதையை சரிசெய்ய எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால் அந்த பாதையை சரிசெய்ய ஆட்சேபனை இல்லை.

29) என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் தாவா சொத்தான பொதுபாதையில் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட குடிநீர் குழாய் உள்ளதா என்றால் மேற்படி புகைப்படத்தில் உள்ளது பொதுபாதை கிடையாது. எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலம் 4 வது பக்கத்தில், 6 வது பத்தியில், அவர்களின் சட்டவிரோத அடாவடி தனத்தை நாங்கள் எதிர்த்து கேட்டதால் எங்களுக்கும், அவர்களுக்கும் தகராறு ஏற்பட்டது என்றும், தாவா சொத்தை நாங்கள் பயன்படுத்தக்கூடாது என்று எதிர் தரப்பினர் மிரட்டியதாகவும், இது குறித்து நாங்கள் மண்ணச்சநல்லூர் காவல் நிலையத்தில் அவர்களுக்கு எதிராக புகார் கொடுத்ததாகவும் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

30) எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலம் 4 வது பக்கத்தில், 6 வது பத்தியில், கடைசி 3 வரிகளில் சொத்து குறித்து எங்களிடம் இருந்த ஆவணங்களை போலீஸாரிடம் காண்பித்து

பிரதிவாதிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு பதிலாக தாவா சொத்தை நாங்கள் பயன்படுத்தக்கூடாது என்று போலீஸாரும் எங்களை மிரட்டியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

31) மேற்படி சங்கதிகளை நிரூபணம் செய்யும் பொருட்டு, காவல் துறையில் எனது புகார் மனுவிற்கு மனு ரசீதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் புகார் கொடுத்தோம், ரசீது பெற்றோமா என்று எனக்கு தெரியாது. நான் மேற்சொல்வது போல் எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், ஆனால் நடந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

32) நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் கை நகலையும், நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அது என்னிடம் இல்லை. காவல்துறை நான் கொடுத்த புகாருக்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை பொறுத்து என்னை காவல் துறையினர் மிரட்டியதாக கூறியுள்ளதை பொறுத்தும், நிரூபிக்க காவல் துறையை இவ்வழக்கில் நான் கட்சி சேர்க்கவில்லை என்றால் கட்சி சேர்க்கவில்லை.

33) எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 6 வது பத்தியில் வெறும் குட்டிசுவருடன் இருந்த தாவா சொத்தில் மீதமிருந்த இடிந்த சுவர்களை வருவாய் துறை அலுவலர்கள் உதவியுடன் JCB இயந்திரம் மூலம் 1 முதல் 3 பிரதிவாதிகள் 2012 ஆகஸ்ட் முதல் வாரத்தில் இடித்தனர் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சங்கதிகளை நிரூபிக்கும் பொருட்டு வருவாய் துறை அலுவர்களை இவ்வழக்கில் நான் கட்சி சேர்க்கவில்லை என்றால் கட்சி சேர்க்கவில்லை.

34) நான் சொல்வது போல் எவ்வித சங்கதியும் நடைபெறவில்லை

என்றாலும், மேற்படி கோவிலுக்கு செல்லும் வழியையே JCB இயந்திரம் மூலம் சரிசெய்தனர் என்றாலும், ஆனால் அதனை நான் தாவா சொத்தில் JCB இயந்திரம் வைத்து தோண்டியதாக தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் காவல்துறையினரையும், வருவாய் துறையினரையும் கட்சி சேர்த்திருந்தால் உண்மை நிலை தெரியவரும் என்பதால் இவ்வழக்கில் அவர்களை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

35) தாவா சொத்தின் 9 கூட்டுரிமையாளர்கள் எவரும் இவ்வழக்கை நான் நடத்த பொது அதிகார ஆவணம் எதுவும் ஏற்படுத்தி கொடுக்கவில்லை என்றால் எனது இடத்தை பொறுத்து நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் அவர்கள் எனக்கு ஆவணம் எழுதிக்கொடுக்க தேவையில்லை. எனது இடம் என்று நான் சொல்வது 9 பேர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

36) மேற்படி 9 நபர்களும் எனக்கு கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளனரா என்றால் இல்லை. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் மேற்படி 9 நபர்களுக்குரிய இடம் 38 செண்ட், நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தின் விஸ்தீரணம் கிழமேல் 26 அடி, தென்வடல் 57 அடி ஆகும். மேற்படி கிழமேல் 26 அடி, தென்வடல் 57 அடி நிலம் மேற்படி 9 நபர்களுக்குரியது என்றால் மேற்படி 9 நபர்களுக்குரிய 38 செண்ட்டில் தான், மேற்படி கிழமேல் 26 அடி, தென்வடல் 57 அடி நிலம் உள்ளது.

37) மேற்படி 9 நபர்களுக்கு பாத்தியப்பட்ட 38 செண்ட் சொத்தில், மேற்படி கிழமேல் 26 அடி, தென்வடல் 57 அடி நிலம் எனக்கு தனித்து

பாத்தியப்பட்டது என்பதற்கு ஆதரவாக வருவாய் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மேற்படி 38 செண்ட்டில் யாருக்குமே தனிப்பட்ட உரிமை இல்லை. அப்படியானால் மேற்படி 38 செண்ட்டில் வெங்கட்ராமனுக்கு தனிப்பட்ட முறையில்கிழமேல் 26 அடி, தென்வடல் 57 அடி பாத்தியப்பட்டது என்பதை நிரூபணம் செய்யும் பொருட்டு எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்பது உயில் ஆவணத்தை வைத்து கூறுகிறேன்.

38) வா.சா.ஆ.5 உயில் ஆவணத்தில் கண்ட சொத்து வெங்கட்ராமனுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு பாத்தியப்படாத கூட்டுபாத்தியஸ்தர் சொத்தை என்னுடைய சொத்து என நான் இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பதாலும், தாவா சொத்தான பொது பாதையை என்னுடைய தனிப்பட்ட சொத்து எனக்கூறி, எந்த முகாந்திரமும் இல்லாமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதனால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்றாலும் சரியல்ல.